அதற்கு பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொன்னேன். நீங்கள் உடனடியாக குடகனாற்றிலிருந்து வழங்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அங்குள்ள மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, கருப்பத் தேவனூர், மற்றும் கொசவப்பட்டி பகுதிகளில் உள்ள இரண்டு ஆழ் துளைக் கிணறுகள் மூலமும், மற்றும் நூர்சாகிப் பகுதியில் உள்ள ஒரு திறந்த கிணறு மூலமும் குடி தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. நடுக்கட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மற்றும் ஓர் ஆழ் துளைக் கிணறு பின்னர் தோண்டப்படும். ஆகவே, குடிதண்ணீருக்குத் தேவையான கிணறுகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குடகனாற்றில் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நகரில் இருக்கக்கூடிய 4 கிணறுகளில் உள்ள தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. குடகனாற்றில் நல்ல தண்ணீர் கிடைக்கும் என்ற கருத்து இருக்கிறது. ஆகவே, இந்த பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை அமைக்கும்போது, அதற்குத் தேவையான ஆழ் கிணறுகளை இந்த குடகனாற்றில் தோண்டி, தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வல்லுநர்களுடைய கருத்தின் பிரகாரம் செயல்படுத்தப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பீடித் தொழிலாளர்களுக்கு வேலையின்மை நாட்களுக்கான ஊதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 897.—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு வேலையின்மை நாட்களுக்கான ஊதியம் (Fall Back wages) தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போதிருந்து அமுலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு "ஃபால் பேக் வேஜஸ்" (Fall back wages) குறைந்தபட்ச ஊதியத்தில் 50 சதவிகிதம் என நிர்ணயம் செய்து அரசு 6—10—1980ம் நாளிட்ட ஆணை எண் 2337-ல்

1981 ஏப்ரல் 27]

முன்னறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் மீது பொதுமக்களிடமிருந்து வந்துள்ள ஆலோசனைகளையும் எதிர்க் கருத்துக்களையும் அரசு ஆய்ந்து ஊதிய முன் அறிவிக்கையை உறுதி செய்வது பற்றி விரைவில் ஆணை பிறப்பிக்கும். அதன்பின் மேற்கூறிய "ஃபால் பேக் வேஜஸ்" (Fall back wages) முறை பற்றிய முடிவு அமுலுக்கு வரும்.

**கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.**

*வினா எண் 898.—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு குறைந்தபட்ச சம்பளம் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டு 2—10—80 தேதி முதல் அமுலுக்கு வருவதாய் அரசு பிரகடனப்படுத்தியபடி சம்பள விகிதங்கள் அமுலாக்கப்படுகிறதா ?

(ஆ) அதை மாற்றியமைக்கும்படி கோரி வியாபாரிகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதா ?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆம்.

(இ) வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட எதிர்க் கருத்துக்கள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயித்து அதைக் கொடுப்பதற்கு தவிர்க்கக்கூடிய முறையில் சில தொழிலதிபர்கள் உயர்நீதிமன்றங்களுக்குச் சென்று அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய தந்திரத்தை கையாளுகிறார்கள். அதைத் தடுப்ப தற்கு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஷாப் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்' கடைகள், நிறுவனங்களில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு முதன்முறையாக இந்த அரசுதான் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறது. அது அனைவரும் பாராட்டக்கூடியதாக அமைந்திருக்கிறது. பாராட்டியும் இருக்கி றார்கள். மாண்புமிகு ரமணி அவர்களும் பாராட்டுவார்கள் என்று கருது கிறேன். ஆனால் சில முதலாளிகள் வழக்கு மன்றங்களுக்குச் சென்றிருக்கி